**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 22/மா/2022**

**நாள் : 22.03.2022**

திரு. ந. ராஜ்குமார்,
சென்னை – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் –04 – எதிர்மனுதாரர்

சென்னை, ஸ்டான்லி நகர், 3வது தெரு, கதவு எண்.2/25 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ந. ராஜ்குமார் அவர்களின் 22.2.2022 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 22/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, ஸ்டான்லி நகர், 3வது தெரு, கதவு எண்.2/25 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ந. ராஜ்குமார் என்பவர் தன்னுடைய 22.2.2022 நாளிட்ட புகார் மனுவில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகின்றேன். மண்டலம் 4, வார்டு 38, கதவு எண்.17/18, துர்காதேவி நகர் 1வது தெரு, தண்டையார்பேட்டை, சென்னை 600 081ல் சென்னை மாநகராட்சி கட்டிட திட்ட அனுமதி பெறாமல் (G+1) கட்டிடம் கட்டி வருகின்றனர். மேலும் நான் இது குறித்து 02.11.2021 அன்று மண்டல அலுவலர் (4) மற்றும் வடக்கு வட்டார ஆணையர் அவர்களுக்கு புகார் மனு அளித்திருந்தேன். மேலும் ஆணையர் அவர்களுக்கும் (ரிப்பன் கட்டிடம்) அளித்திருந்தேன்.

மேலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் சில வினாக்கள் கேட்டு இருந்தேன். இது நாள் வரை எவ்வித பதிலும் இல்லை. திட்ட அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டி வருவதாலும் மேலும் சென்னை மாநகராட்சிக்கு பெருத்த இழப்பு ஏற்படும் வகையிலும் அங்குள்ள உதவி செயற்பொறியாளர் வார்டு மற்றும் உதவி செயற்பொறியாளர் பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் உடந்தையாக உள்ளனர். ஆகவே, ஐயா அவர்கள் தயவு கூர்ந்து எனது புகார் மனு மீது உரிய நடவடிக்கை எடுத்து நியாயம் கிடைத்திட வழிவகை செய்து தருமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 7.3.2022 நாளிட்ட கடிதம் மூலம், மண்டல அலுவலர், மண்டலம் 4 பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களிடம் கோரப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவ 7.03.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 22.03.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

இந்நிலையில் மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது 10.3.2022 நாளிட்ட கடிதத்தில் "நான் ஏற்கனவே புகார் மனு ஒன்றை மண்டலம் 4, வார்டு 38, கதவு எண்.17,18 துர்கா தேவி நகர் I–வது தெரு, தண்டையார் பேட்டை,

சென்னை-600 081, உள்ள கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுத்தல் சம்மந்தமாக கொடுத்து இருந்தேன். நான் புகார் கொடுத்து அடுத்த நாளே அக்கட்டித்தின் மீது உதவி பொறியாளர் நடவடிக்கை எடுத்தபடியால் நான் கொடுத்த புகார் மனுவினை திரும்ப பெற்றுக்கொள்கின்றேன்." என்று தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் புகார் மனு மீது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்களால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மனுதாரர் தெரிவித்து தன்னுடைய புகார் மனுவினை திரும்பப்பெற்றுக்கொள்வதாக தெரிவித்திருப்பதை ஏற்று இம்மனு மீதான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. ந. ராஜ்குமார்,
கதவு எண்.2/25, ஸ்டான்லி நகர், 3வது தெரு,
ஸ்டான்லி நகர்,
சென்னை – 600 021.
2. மண்டல அலுவலர்,
மண்டலம்–4,
பெருநகர சென்னை மாநகராட்சி,
266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை – 600 021.
3. ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.
4. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்